26.02.2024

MC.1/2022

PW- 2, பார்த்தசாரதி

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

நானும் என் மனைவியான 1வது மனுதாரரும் கலந்து பேசி எங்களது பேரனுக்கு வேண்டி இந்த மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய மகள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். திருமணத்தின் போது என் மகளுக்கு 20 பவுன் நகையும் 1 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் செய்தோம் என்றால் சரிதான். அது எங்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. என் மகள் இறுதியாக 3/65 வெள்ளாகுளம் கிராமத்தில் இருந்தார். திருமணத்தின் போது 1/2 பவுன் தாலி தான் போட்டார். தாலி செயினை நாங்களே செய்து கொடுத்தோம். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவர் 7 பவுன் தாலி செயினையும் 1/2 பவுன் தாலியும் அணிவித்தார் என்றால் சரியல்ல. என் மகள் இறந்த பிறகு ஜாஸ்மின் என்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்ணை எதிர்மனுதாரருக்கு நாங்கள் தான் திருமணம் செய்து வைத்தோம் என்றால் இல்லை. அந்த பெண்ணின் கணவர் இறந்துவிட்டார். தற்போது எதிர்மனுதாரருக்கு 2 வது திருமணத்தின் மூலம் ஒரு குழந்தை உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு பூர்வீக சொத்து மூலம் ரூ.50000/- மும் சம்பளம் மூலம் ரூ.80000/- வருமானம் உள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே என்னுடைய பேரனுக்கு பேச்சு வார்த்தை நடத்தி ரூ.30,00,000 மதிப்புள்ள ஒரு வீடும் 50 செண்ட் நிலமும் பணம் ரூ.5,00,000/- மும் கொடுத்துள்ளார் என்றால் பணம் கொடுக்கவில்லை. அந்த வீட்டை வாடகைக்கு விட்டால் எவ்வளவுக்கு போகும் என்றால் கிராமம் என்பதால் ரூ.2000 க்கு போகும். நான் பொய் சாட்சி யம் அளிக்கிறேன் என்றும் ரூ.10,000 வாடகைக்கு போகும் என்றால் சரியல்ல. தற்போது நான் எந்த வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் எதிர்மனுதாரர் எழுதிக் கொடுத்த வீட்டில் அவரது மகனை வைத்து நாங்களும் இருந்து வருகிறோம். அந்த வீட்டில் தான் என் மகளுடைய சீர்வரிசை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மை தான். எங்களுக்கு அதே ஊரில் வேறு ஒரு சொந்த வீடும் உள்ளது என்றால் சரிதான். அதை வாடகைக்கு விட்டால் எவ்வளவுக்கு போகும் என்றால் ரூ.1000 க்கு போகும் என் அம்மா அதில் குடியிருந்து வருகிறார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அந்த வீட்டை ரூ.5000 க்கு வாடைக்கு விட்டுவிட்டு எதிர்மனுதாரர் கொடுத்த வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மேற்படி வீட்டை வீட்டின் வாடகை வருமானத்தை வைத்து மனுதாரரை பராமரிப்பதற்கு வேண்டி தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 50 செண்ட் நிலத்தில் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம் என்றால்

சரியல்ல. எதிர்மனுதாரரின் அண்ணனிடம் உள்ளது. நான் டெய்லராகவும் என் மனைவி கூலி வேலையும் செய்து வருகிறார். எங்களுக்கு மாதம் ரூ.12000 வருமானம் வரும். மனுதாரர் கோரியது போல் ஜீவனாம்சம் கிடைக்கதக்க அல்ல என்றும் ஏற்கனவே மனுதாரருக்கு கொடுக்க வேண்டியதை எதிர்மனுதாரர் கொடுத்ததால் மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தும் நான்தான் அனுமதிக்காமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.